கம்பன் ஒரு அய பிரமனா?

அ.மயூரன்
(ஒருபேப்பருக்காக)



தமிழகத்தில் சோழர் காலம் ஓர் பொற் காலமாகும். இது தமிழர் இலக்கிய வரலாற் றிலும் சரி அரசியல் வரலாற்றிலும் சரி மகோன் னத நிலையில் இருந்தது என்பது மறுக்க முடியாததாகும். எக்காலத்திலும் எழுந்திராத அளவுக்கு இதிகாசங்கள், புராணங்கள், என வகைப்படுத்திக் கூறும் அளவுக்கு பெருந் தொகையாக இலக்கியங்கள் எழுச்சி பெற்ற காலப்பகுதி இக்காலப்பகுதி என்பதே இது ஓர் பொற்காலமாகும்.

சோழ மன்னர்கள் இமயம் தொடக்கம் குமரி வரை தன்னாதிக்கம் செலுத்தி ஈழத்தையும் கடாரத்தையும் (தென்கிழக்காசிய நாடு) வென்று 'கங்கை கொண்டான், கடாரம் கொண் டான்,' எனப் போற்றப்பட்டமை அக்கால மன் னர்களின் சாம்ராச்சிய வேட்கைக்கு சான்றாக அமைந்தது.

எனவே போரின் மூலம் ஈட்டப்பட்ட பொருள், சூறையாடப்பட்ட செல்வம், கடல் வாணிய விருத்தி, என அங்கு கொள்வாருமி ல்லை கொடுப்பாருமில்லை என்ற அளவுக்கு செல்வம் மலிந்து கிடந்தமையாலும் ஓர் பேரரசின் சொந்தக்காரர்களாக இருக்கின் றோம் என்ற பெருமித உணர்வு மேலோங்கி இருந்தமையாலும் இப்பெருமித உணர்வை வெளிப்படுத்துவதற்காக இலக்கியங்கள் பெருந்தொகையாக எழுச்சி பெற்றன.

எனவே புலவனின் கற்பனை வளத்திற்கு அணி சேர்க்கக் கூடிய பாட்டுடைத் தலைவர் களுக்கு உதாரணமாக மன்னர்கள் விளங்கிய மையால் அக்கால சூழலுக்கு ஏற்ப நல்ல கருத்துக்களைச் சொல்வதற்கு கவிஞர்கள் மன்னர்களை பாட்டுடைத் தலைவர்களாக்கி இலக்கியம் புனைந்தனர்.

அந்தவகையிலே கம்பனும் தான் எடுத்துக் கொண்ட பார்ப்பணர்களின் நம்பிக்கைக்குரிய இராமவதாரத்தை தமிழில் இலக்கிய நயம் சொட்டச் சொட்ட பாடிமுடித்தான்.

அக்கம்பனை அபயபிரமன் என முதன் முதலாக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று சரியா னதா என்பது ஆய்வுக்குரியதே. ஏனெனில் தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களில் பெரும்பாலானவை முற்பட்ட சோழர் காலத் தில் தோற்றம் பெற்றவை என்கின்றனர்.

இப்பேரிலக்கியங்களின் பின் சிற்றிலக்கிய ங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்றே வகைப்படுத்தியிருந்தனர். கம்பனின் கம்பரா மாயணம் பேரிலக்கியங்கள் அல்லது சிற்றி லக்கியங்கள் என்ற வரையறைக்குள் அடங்க வில்லை. அப்படி அடங்கத் தகுதியற் றிருந்தது. என்பதே உண்மை. எனவே இராமவதாரம் இதிகாசங்களின் வகைக்குள் ளேயே அடங்கியிருந்தது. ஆகவே பெருங் காப்பியங்களையும் சிறுகாப்பியங்களையும் ஆக்கிய இலக்கிய புலவர்களிருக்கும் போது கம்பனை அபயபிரமன் எனச்சொல்ல முடியாது.

சோழர் காலத்தில் தமிழை உய்ப்பிக்க உதித் தவர்களான கம்பர், ஒளவையார், ஒட்டக்கூத்தர், சேக்கிழார், ஆகியோரின் வரிசையிலே ஒப்பா ரும் மிக்காரும் அற்ற புலவராக விளங்கியவர் கம்பராகும். இவருடைய கவித்துவம் தனித்துவமானது. கம்பன் பிறந்த தமிழ்நாடு என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க தமிழ் நாட்டிலே மாயவரத்திற்கு அருகில் உள்ள சிற்றூரான தேரழுந்தூரில் காளிக்குப் பூசை செய்யும் எளிய குடும்பத்தில் ஆதித்தன் என்பவருக்கு மகனாக கம்பர் பிறந்தார்.

இளம் வயதிலிருந்தே அறிவுத்திறனுடன் தமிழில் புலமை பெற்று இருந்த கம்பனை வைஷ்ணவமதத்தைச் சேர்ந்ததிருவெண்ணை நல்லூர் சடையப்ப வள்ளல் ஆதரித்து வந்தார். இதனால் இவர் பின்னாளில் தானும் வைஷ்ணவ மதத்தைத் தழுவி அம்மதத்தை வளர்க்கப் பாடுபட்டார்.

இவ்வாறு தமிழ்ப் புலமையுடன் விளங்கிய கம்பன் தனது கவியாற்றலினால் வால்மீகி இயற்றிய ஆதிகாவியமான இராமாயணத்தை ஒட்டி தனது பாணியில் இராமாயணத்தை எழுதினான். அவ்வாறு கம்பன் தான் எழுதிய இராமகாதைக்கு இராமவதாரம் என்றே பெயரிட்டான். இவை காலகதியில் மங்கி மறைந்து வால்மீகி இட்ட இராமாயணம் என்ற பெயர் நிலைநின்று கம்பராமாயணம் என்ற பெயரிலேயே இன்றுவரை அழைக்கப்படுகின்றது.

கம்பர் பொதுவாக வால்மீகியைப் பின்பற்றி காவியம் புனைந்த போதிலும் அது வால்மீகி இராமாயணத்தின் மொழிபெயர்ப்போ அல்லது தழுவலோ எனக் கூற முடியாது. வால்மீகி இராமாயணத்தில் இல்லாத பல கதைகளை தான் எழுதிய இராமவதாரத்திற்குள் புகுத்தி னான். அவனதுகவித்துவத்தினாலேயேகம்பரா மாயணம் சிறப்புப்பெற்றது.

உதாரணமாக சீதை இராமனை முதன் முதலாகச் சந்திக்கும் போது

'எண்ணகு நலத்தினாள் இனையள் நின்றுழி
கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றை ஒன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'

என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார். வால்மீகி இராமாயணத்தில் இந்தப் பகுதி கிடையாது. இராமாயணம் படிக்காதவன் கூட தெரிந்து வைத்திருக்கும் வரிகள் 'அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்'. ஆகும் அந்தளவுக்கு கம்பனின் கவித்துவம் போற்றுதற்குரியது. அவனது கவித்துவத்திற்கு நான் என்றைக்குமே தலைசாய்ப்பவன்.

கம்பன் கம்பராமாயணம் மட்டுமல்ல உழவர் மேம்பாட்டை மையமாக வைத்து ஏர் எழுபது என்ற கவிதை நூல், தன்னை ஆதரித்து வளர்த்த சடையப்ப வள்ளலுக்கு நன்றி கூறுமுகமாக சடகோபர் அந்தாதி, சரஸ்வதிக்கு தலைவணங்கு முகமாக சரஸ்வதி அந்தாதி, சிலை எழுபது, திருக்கை வழக்கம், ஆகியவை உட்பட ஏழு நூல்களை வெளியிட்டதாக அறிகின்றோம்.

புராணங்கள் 'மகரசங்கிராந்தி' என்று போற் றும் உழவர் திருநாளை கம்பனும் போற்றி பாடியுள்ளான். அவ் அமுதத் தமிழ்ப் பாடல் களை நாம் இன்று மறந்திருப்பது விந்தையே.

மாறாக இக்கம்பனால் பாடப்பட்டு மதப் பரப்புக் கொள்கைகளுக்கு முதன்மை கொடுக் கப்பட்ட கம்பராமாயணம் பிரபல்யமான தேனோ? படிப்போர் வியக்க வைக்கும் வண்ணம் அற்புதமாகப் படைத்த ஏர் எழுபதிலிருந்து ஓர் அமுதப்பாடலை உங்கள் முன் தருகின்றேன்.

கார் நடக்கும் படி நடக்கும்
காரானர் தம்முடைய
ஏர் நடக்கு மெனில் எங்கும்
இயலிசை நாடகம் நடக்கும்!
சீர் நடக்கும்! திரு நடக்கும்!
திருவறத்தின் செயல் நடக்கும்
பார் நடக்கும்! படைநடக்கும்!
பசி நடக்க மாட்டாதே!'

என்பது கம்பனின் கவிதை. மழை பொழிந்தால் உழவனின் தொழில் சிறக்கும் தொழில் சிறந்தால் இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழும் எங்கும் முழங்கும் சிறப்பெல்லாம் நடக்கும் செல்வம் கொழிக்கும். செல்வத்தால் திருவறத்தின் செயல்கள் நடக்கும் இதனால் உலகம் சிறக்கும் அத்துடன் படைகளின் செயற் பாடும் சிறப்பாக இருக்கும் ஆனால் பசி மட்டும் இருக்காது என்பதே இதன் பொருளாகும்.

சோழராட்சிக் காலத்தில் தமிழ் வளர ஆலயங்களும் முன்னோடியாக இருந்தன. ஆகவே கம்பரும் கோவிலில் வைத்தே தனது இராமவதாரத்தை அரங்கேற்ற முடிவு செய்தார். இதற்காக அவர் தேர்ந்தெடுத்தது திருவரங்கம் திருக்கோயில். திருவரங்கம் வந்த கம்பர் தனது இராமவதாரத்தை அரங்கேற்றும் முயற்சியில் ஈடுபட்டார். அங்கே வித்துவான்களின் கையொப்பம் பெறக் காத்துக் கிடந்தார்.

ஏனெனில் அந்தக் காலத்தில் ஒரு அரங்கேற்றம் செய்வதாயின் வித்துவான்களின் கையொப்பம் முதன்மையானது.

அவர்களின் ஒப்பம் கிடைத்து விட்டால் இராமவதாரம் அரங்கேறிவிடும். கம்பன் தனது மகனான அம்பிகாபதியிடமே முதலாவது கையொப்பத்தை ஒரு பாடலைப் பாடி தனது கவித்துவத்தை நிலைநிறுத்தி பெறுகின்றான்.

ஆனால் வித்துவான்களோ 'இவ் இராம காதை மதப்பரப்புரையை மேற்கொள்ளும் வைஷ்ணவ மதக்கொள்கைகளை கொண்டி ருக்கின்றது என்றும் இது ஒரு காப்பிய வகைக்குள் அடங்கவில்லை என்று கூறி தாம் இதில் கையொப்பமிட மாட்டோம் நீர் தில்லை வாழ் தீட்சிதர்களிடம் கையொப்பம் வாங்கிவந்து விட்டால் எங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை'. எனக்கூறி சிதம்பரத்துக்கு அனுப்பிவிட்டனர்.

கம்பர் சிதம்பரம் வந்து பல நாட்கள் காத்துக்கிடந்தும் கையொப்பம் கிடைத்த பாடில்லை. ஒரு நாள் கையொப்பம் வாங்க கம்பர் தில்லை வாழ் தீட்சிதர்களைக் காணச் சென்ற வேளை பாம்பு தீண்டி சுயநினைவு இழந்திருந்த குழந்தையை உமது பாடல் மூலம் குணமடையச் செய்தால் நாம் கையொப்பமிடுகின்றோம் என தீட்சிதர்கள் செல்ல கம்பனும்

'மங்கையொரு பங்கர்மணி மார்பிலாரமே!
பொங்குங் கடல் கடைந்த கொற்கயிறே –
திங்களையும்
சீறிய தன் மேலூருந் தெய்வத்திரு நானே,
ஏறிய பாம்பே யிறங்கு!'

எனப் பாடி குழந்தையைக் குணமடையச் செய்ததன் பின் தில்லை மூவாயிரவர் 'கம்பரே உமது கவித்துவத்திற்காகவே நாங்கள் கையொப்பமிடுகின்றோம்' எனக் கூறி கையொப்பமிட்டனர். (தனது இராமாயணத்தில் நாகபாச படலத்தில் இதன் சிலசெய்யுள் களிலும் இதுபற்றிக் கூறியுள்ளார்.)

இவர்களோடு மட்டும் நில்லாது தஞ்சை அஞ்சனாட்சி, மாவண்டூர் கருமான், ஆகியோ ரின் கையெழுத்துக்களைப் பெற்றுக்கொண்டு திருவரங்கம் திரும்பி குலோத்துங்க சோழனின் கையொப்பத்தையும் பெற்று திருவரங்கம் தாயார் சந்நிதி அருகே கோயில் கொண்ட நரசிம்மர் ஆலயத்தில் அழகிய சிங்கர் பெருமான் முன்னிலையில் சோழமன்னன் குலோத்துங்க சோழன் தலைமையில் நடந்த இவ் அரங்கேற்றத்தை வைஷ்ணவ ஆசாரியார் நாதமுனிகள் ஆரம்பித்து வைக்க ஜீயர் சுவாமிகள், சடையப்ப வள்ளல், சோழமன்ன னின் மகள் அமராவதி, கம்பனின் மகன் அம்பி காபதி, மற்றும் பெரும்புலவர்களும் கலந்து கொண்டனர்.

இவ்வாறுதான் கம்பன் தனது இராம வதாரத்தை பெரும் சிரமத்தின் மத்தியிலேயே அரங்கேற்றினான். உதிக்கும் சூரியன் மலை களிடையே விழுவதன்முன் எழுநூறு கவி பாடியவன் கம்பன். இவன் கம்பரா மாயணத்தை 10,569 பாக்களில் பாடி முடித்தான்.

NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS